# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | MARCH மார்ச் | 2022

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# ..கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்..

**மத்தேயு 13:19**





கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** | ஆசிரியர் **பிலேமோன் ராஜா**


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| தேவனால் முடியாத.. | 8 |
| வரலாற்றில்.. | 9 |
| சிறுவர் பகுதி | 11 |


*In memory of J.C. CHOATE*


*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., E. **ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**
**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**
**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்
போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**
**Every Sundays 2pm**
**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**



## கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு

**கிருபையின் கீதங்கள்**


விபரங்களுக்கு :

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**
421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**
கர்த்தரின் வார்த்தையை
கற்று தரும் சத்திய வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# காதுள்ளவன் கேட்கக்கடவன்...

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



*கர்த்தருடைய வேதத்தின் மீது பற்றுக்கொண்ட கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அன்பின் வாழ்த்துக்கள்.*

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 3ம் தேதி உலக 'கேட்டல்' தினமாக (World Hearing Day) அனுசரிக்கப்படுகின்றது. ஆகையால், இந்த மாதம் உங்களுடன் 'கேட்டல்' அதாவது 'கற்றலைக்' குறித்து, கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்டவர் இயேசு, கேட்டுக் கற்றுக்கொள்வதின் அவசியத்தினை மக்களுக்கு போதித்தார். கர்த்தருடைய வார்த்தையை எவ்வாறு கற்க வேண்டும்? கற்றுக்கொள்வதினால் வரும் பலன் என்ன? என்பவைகளைக் குறித்து நிறைய காரியங்களை போதித்துள்ளார். அவைகளையும் பற்றிய சத்தியத்தினை நாம் அறிந்துகொண்டு, நமது ஆத்துமாவை பெலப்படுத்துவோம்.

## 1. எதைக் கேட்க (கற்க) வேண்டும்:

**மத்தேயு 13:9** "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்."

கேட்பதற்குக் காது இருந்தால், கேட்டு கற்றுக்கொள்ளுங்கள் என ஆண்டவர் இயேசு அறைகூவல் விடுத்தார். எதனைக் கேட்கும்படி அழைக்கின்றார்? கர்த்தருடைய வார்த்தையினை கற்கும்படி அழைக்கின்றார். மாறாக 'இது என் காது, என் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் கேட்பேன்' என நாம் கேட்டால், நாம் கேட்கின்ற காரியங்களினாலே நாம் விழுந்து போகக் கூடிய அபாயம் இருக்கின்றது, என்பதனை நினைவில்கொள்ள வேண்டும். ஏனெனில் ஜீவனுள்ள அனைவருக்கும் அன்னையாகிய ஏவாள், இவ்வாறு தான் விழுந்து போனாள். அவள் கேட்ட பொய்யை உண்மை என நம்பி விழுந்து போனாள். **(ஆதியாகமம் 3:1–8).**

சிலவற்றை கேட்கக் கூடாது என கர்த்தருடைய வார்த்தை நம்மை அநேக இடங்களில் எச்சரிக்கின்றது. **நீதிமொழி 19:27,** "என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச் செய்யும் போதகங்களை நீ கேளாதே.'' அப்படிப்பட்டவைகளை கேளாமல், அவைகளை கேட்க கிடைக்கும் தருணங்களை தவிர்க்க வேண்டும், அதாவது விட்டு விலக வேண்டும். **1 தீமோத்தேயு 4:7,** "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு." தீமையானவற்றை கேட்பது, தீமையானவற்றையே செய்ய தூண்டுவதாக இருக்கின்றது. காரணம், நாம் எவைகளை கேட்கின்றோமா, அவைகளே நமது நம்பிக்கையாக நாளடைவில் உருவெடுத்து, செயல்களாக மாறும்.

நம் காதும் கண்ணும் வாசலாக இருக்கின்றது. அவற்றின் வழியே நன்மை வந்தால் நம்மை நல்லது செய்யவும் தீமை வந்தால், நம்மை கெட்டது செய்யவும் தூண்டும். ஆகையால் 'எல்லாவற்றையும் கேட்பேன்' என எண்ணுவது ஞானமான முடிவாக இருக்காது. இதற்கு, பைபிள் நெடுக நாம் நிறைய உதாரணங்களை பார்க்க முடியும். மாபெரும் ஞானி சாலமோனின் மகன் ரெகோபெயாம், தன் நண்பர்களின் பேச்சை கேட்டதால், தன் அரசின் பெரும்பகுதியை இழந்தான். இந்த அண்டத்தின் மாபெரும் பலசாலியாக கருதப்படும் சிம்சோன், தெலீலாளின் பேச்சை நம்பி பெலனற்று, அவமானப்பட்டு மடிந்துப்போனான். ஆமானின் பேச்சை கேட்டு, பேரரசனான அகாஸ்வேரு தவறான முடிவெடுத்தான். பேரரசனான நேபுகாத்நேச்சரும், மந்திரிகளின் பேச்சைக் கேட்டு, தவறான முடிவெடுத்தான். இவ்வாறு பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது. இவ்வளவு ஏன் நாமே அநேக நேரங்களில் சிலரின் தவறான பேச்சு மற்றும் ஆலோசனை கேட்டு, செயல்பட்டு, அவதிப்பட்ட, பின்பு, 'அடடா இப்படி செய்திருக்க கூடாதே' என எத்தனை முறை யோசித்து இருப்போம்.

‘களவும் கற்று மற’ என்று தமிழ் பழமொழியை சிலர் தவறாக பயன்படுத்துவது உண்டு. அதாவது, எல்லாவற்றையும் தெரிந்து மறந்துவிடு என சொல்வார்கள். அந்த பழமொழியின் உண்மை வடிவம், “களவும் கற்க மற” என்பதாகும். அதன் பொருள், தவறான எதையும் அறிந்துகொள்ளாதே என்பதே. அதனை ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது பைபிளில் இவ்வாறாக பரிசுத்த ஆவியானவர் பதிவு செய்துள்ளார் **ரோமர் 16:19,** “உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.” ஆகையால் தான் ஆண்டவர் இயேசு, தமது அடியார்களாகிய நம்மை ‘‘என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்’’ என அழைக்கின்றார். **மத்தேயு 11:29,** “நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.”

நாம் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில், அவரது போதனைகளை கேட்டு, கற்றுக்கொண்டு, அதன்படி வழிநடக்க வேண்டியவர்கள். அதனால் தான் ஆவியானவரும் தம் சுயமாய் எதனையும் போதிக்காமல், ஆண்டவர் இயேசு சொன்னதை நினைவுப்படுத்தி நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துகின்றார். **யோவான் 16:13-15** “சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.”

ஆயினும், இன்றைய நாட்களில் அநேகர் சுயமாய் போதிப்பதும், அதனை ஆவியானவர் வெளிப்படுத்தினார் என சொல்வதும் வேடிக்கையாகவும், ஆவியானவரையே வேதனைப்படுத்துவதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அப்படி போதிப்பவர்கள் தங்களை மேன்மையாக காண்பித்துக்கொள்ள விரும்பி, ஆவியானவரை மட்டுப்படுத்தி, கிறிஸ்துவின் தூய்மையான சத்தியத்தினை புறந்தள்ளுகின்றனர். ஆகையால் தான் ஆவியானவர், அப்படிப்பட்டவர்களைக் குறித்து, அவர்கள் தங்கள் கைகளில் பைபிளை ஏந்திக்கொண்டு வந்தாலும், உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளாதிருங்கள்; மற்றும் அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாதிருங்கள்; ஏனெனில் அது நம்மை அவர்களின் துர்க்கிரியைக்கு பங்குள்ளவர்களாக்கி, நமது விசுவாச கிரியைகளின் பலனை இழந்துப்போக செய்யும் என எச்சரிக்கின்றார். **2 யோவான் 8-11,** “உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள். கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்.” ஆகையால், நாம் கேட்கின்றவைகளைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

## 2. எப்படி கேட்க (கற்க) வேண்டும்:

எதனை கேட்க (கற்க) வேண்டும் என அறிந்த நாம், அடுத்ததாக அதனை எப்படி கற்க வேண்டும் என அறிந்துகொள்ள வேண்டும். ஆண்டவர் இயேசு, நம்மை, வேதவசனங்களை ஆராய்ந்து பார்க்க சொல்கின்றார். **யோவான் 5:39** “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.”

கர்த்தருடைய வார்த்தையை நாம் ஆர்வத்துடன் கற்க வேண்டும். காரியங்கள் இப்படி இருக்கின்றதா என ஆர்வத்துடன் பெரோயா பட்டணத்தினர் கற்றனர். **அப்போ 17:11** “அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால்,

தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்."

கர்த்தருடைய வார்த்தையை, நாம் ஆசையாக கற்க வேண்டும். சங்கீதக்காரனாகிய தாவீது, தன் வாயை ஆவென திறந்து அவைகளுக்காக ஏங்குவதாக கூறினார். அவைகளை கற்கும்படி, குறித்த ஜாமத்திற்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்கின்றது எனவும் கூறுகின்றார். **சங்கீதம் 119:131, 148,** "உம்முடைய கற்பனைகளை நான் வாஞ்சிக்கிறபடியால், என் வாயை ஆவென்றுதிறந்து அவைகளுக்கு ஏங்குகிறேன்." "உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்குமுன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்."

அடுத்ததாக, நாம் கர்த்தருடைய வார்த்தையினை அர்ப்பணிப்போடு கற்க வேண்டும். எபேசு சபையார், அப்போஸ்தலனாகிய பவுலால், திறன்னு என்பவனின் பாடசாலையிலே, ஏறக்குறைய 2 ஆண்டுகள் அனுதினமும் கர்த்தருடைய வார்த்தைகயினை கற்றனர். **அப்போஸ்தலர் 19:8–10,** "பின்பு பவுல் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணைப் பண்ணி, புத்திசொல்லிக் கொண்டு வந்தான். சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டுவிலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அனுதினமும் சம்பாஷித்துக் கொண்டுவந்தான். இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்.."

அடுத்ததாக, கர்த்தருடைய வார்த்தையினை திறந்த மனதுடன் கற்க வேண்டும். அநேக பெண்கள் நடுவிலே அப்போஸ்தலாகிய பவுல் போதிக்கின்றார். ஆயினும், லீதியாள் என்பவள் மாத்திரம் திறந்த மனதுடன் கற்றாள். **அப்போ 16:14,15,** "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும், தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி; நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்."

கர்த்தர் அவள் இருதயத்தினை திறந்தருளினார் என படிக்கும் போது, மற்றவர்களின் இருதயத்தினை அவர் திறக்கவில்லை என பொருள் அல்ல. ஏனெனில், ஒருவரும் கெட்டுப்போக கூடாது என ஏங்குகின்ற கர்த்தர், எல்லாரும் திறந்த மனதுடன் தான் வசனம் கற்க வேண்டும் என விரும்புகின்றார். இங்கே சொல்லப்பட்ட காரியம், லீதியாள், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படி வேண்டும் என மனதுடன் கற்க வந்தாள் என்பதையே வெளிப்படுத்துகின்றது. நாம் வேத அறிவை வளர்த்துக்கொள்ள மாத்திரமல்ல, ஆத்துமத்தினை புதுப்பித்துக்கொள்ள வேண்டிய மனதுடனும், கற்க வேண்டும் என்பதையே இது வலியுறுத்துகின்றது.

கர்த்தருடைய வார்த்தையை, எவ்வளவு அறிந்திருக்கின்றோம் என்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல அதற்கு முழுமையாக கீழ்ப்படிகின்றோமா என்பதும் மிக முக்கியம். **யாக்கோபு 1:22** "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்."

அடுத்ததாக, நாம் கர்த்தருடைய வார்த்தையை தீவிரமாக கற்க வேண்டும். யாக்கோபு ஆசிரியர் கர்த்தருடைய வார்த்தையை தீவிரமாக கேட்டுக் கற்றுக் கொள்ளுங்கள் என அறைகூவல் விடுக்கின்றார். **யாக்கோபு 1:19** "ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்;"

ஏன் இந்த தீவிரம் வேண்டும்? ஆத்தும இரட்சிப்பு என்பது தீவிரமானதே **(2 கொரி 6:1–2).** காலங்கள் கொடுமையானதாகவும், நாட்கள் பொல்லாததாகவும் இருக்கின்றது **(எபே 5:16).** நமது ஜீவனும் (வாழ்வும்) நிலையற்றதே **(யாக் 4:14),** என்பதனை நினைவில் கொள்வோம்.

அடுத்ததாக, நாம் கர்த்தருடைய வார்த்தையினை, தீர்க்கமாக கற்க வேண்டும். தீர்க்கமாக கற்பது

என்பது, கற்பதில் நிலைத்திருக்கும்படி கற்பதாக இருக்கின்றது. **2 தீமோ 3:14** "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்''. அது கனிதரும்படியாக கற்பதாக இருக்கின்றது **(யோவான் 15).** மேலும் , அது ஆண்டவர் இயேசு சொன்னது போல முப்பது, அறுபது, நூறாக பலன் தரும்படி கற்பதாகவும் இருக்கின்றது. **மத்தேயு 13:23** "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்,"

### 3. ஏன் கேட்க (கற்க) வேண்டும்:

எப்படி கேட்க (கற்க) வேண்டும் என அறிந்த நாம், அடுத்ததாக அதனை ஏன் கற்க வேண்டும் என்பதையும் அறிந்துக்கொள்ள வேண்டும். ஏன் கற்க வேண்டும் என்பதை அறிவது, நம்மை கர்த்தருடைய வார்த்தையை முழுமனதோடு கற்றுக்கொள்ள உற்சாகமளிப்பதாக இருக்கும்.

ஏன் கற்க வேண்டும்? நாம் இரட்சிக்கப்பட கர்த்தருடைய வார்த்தை கேட்க (கற்க) வேண்டும். ஏனெனில் கர்த்தருடைய வார்த்தைக்குள் தான் நமது இரட்சிப்பு இருக்கின்றது. **ரோமர் 1:16** "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது."

கர்த்தருடைய வார்த்தை தான் நம்மை விடுவிக்கும் என ஆண்டவர் இயேசு சொன்னார். **யோவான் 8:32** "சத்தியத்தையும அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.'' கர்த்தருடைய வார்த்தை நம்மை பரிசுத்தப்படுத்துகின்றது, **யோவான் 17:17** "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." கர்த்தருடைய வார்த்தைக்குள் தான் மெய் ஞானம் இருக்கின்றது. **சங்கீதம் 19:7** ''கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது." கர்த்தருடைய வார்த்தைக்குள் தான் நமக்கான மெய் வாழ்வும் இருக்கின்றது **(யோவான் 5:39, யோவான் 17:1–3).** ஆகையால் பிரியமானவர்களே, பைபிளில் சொல்லப்பட்டுள்ள பரிசுத்தவான்களைப் போல, கர்த்தருடைய வார்த்தையினை கேட்டு, கீழ்ப்படிந்து, நம்மை நாமே அதற்கு ஒப்புக்கொடுத்து, தீர்மானித்து வாழ்வோம். கர்த்தர் நம்மை அவருடைய வார்த்தையின்படி ஆசீர்வதிப்பாராக **(வெளி 1:3).**

அன்புடன்,
**–ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431*) ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# திறந்த மனதுடன் வசனத்தினை கற்ற லீதியாள்

சகோதரி : பேபி ராஜா



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினால் என்னுடைய வாழ்த்துக்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மாதம் நாம் கர்த்தருடைய வார்த்தையினை, லீதியாளைப் போல திறந்த மனதுடன் கற்க வேண்டும் என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்வோம்.

பெண்களாகிய நாம் எத்தனையோ அவசியமில்லாத காரியங்களை கேட்க, பேச்சுகளைக் கேட்க, உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கேட்போம். ஆனால், இவையெல்லாம் நமக்கு பரலோகத்தையும், ஆசீர்வாதத்தையும் தராது. ஆகையால் தான், வீணானவைகளை கேட்காதீர்கள் என்று தீமோத்தேயு புத்தகத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார்.

கேட்பதில் நாம் நல்லப் பங்கை தேர்ந்தெடுக்கனும். நாம் மரியாளை நம் ஞாபகத்தில் கொண்டுவருவோம். இயேசுகிறிஸ்து, மார்த்தாள்–மரியாள் வீட்டிற்கு வந்திருக்கும்போது, மரியாள் இயேசுவின் பாதத்தின் அருகே உட்கார்ந்திருந்து, அவர் பேசுகிற வசனங்களை அவள் காது கொடுத்து கேட்டுக்கொண்டிருந்தாள். ஆண்டவர் அவளை பாராட்டினார். **(லூக்கா 10:40–42).** நாமும் இன்றைய நாட்களில் செய்ய வேண்டியதும் அதுவே! ஆண்டவரின் சமூகத்தில் அமர்ந்து, அவருடைய வார்த்தையின் சத்தியத்தினை அறிந்துகொள்ள வேண்டும். அது நல்ல, தேர்வாக (பங்காக) இருப்பதாக ஆண்டவரே சாட்சி கொடுத்தார். மேலும், அது ஒன்றே நமக்கு தேவையானதும் என்று சொன்னார்.

மரியாளைப் போல, ஆண்டவரின் சமூகத்தில் அமர்ந்து கற்பது, எவ்வளவு அவசியமோ, அதைப்போல அப்படி கற்பதை, திறந்த இருதயத்துடன் கற்க வேண்டியதும் அவசியமாக இருக்கின்றது. லீதியாள், கர்த்தருடைய வார்த்தையை திறந்த மனதுடன் கேட்டு கற்றுக்கொண்டாள் என நாம் வாசிக்கின்றோம். **அப்போ 16:13–15** "ஓய்வு நாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு, உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படிக ர்த்தர்அ வள்இ ருதயத்தைத்தி றந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்."

கர்த்தருடைய வார்த்தையை திறந்த மனதுடன் தான் கற்றோமா? இல்லையா? என்பதை நம்மை நாமே பரிசோதித்து அறிந்துகொள்ள முடியும்.

லீதியாள், கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிந்தாள். திறந்த மனதுடன் நாமும் கர்த்தருடைய வார்த்தையை கேட்கும் போது, உடனே கீழ்ப்படிவோம். மாறாக, ஏன் செய்யவில்லை என சொல்ல காரணத்தினை தேடிக்கொண்டிருக்க மாட்டோம். அடுத்ததாக அவள், தன் அன்பிற்குரியவர்களிற்கு அதனை சொல்லி, அவர்களும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய உதவியாக இருந்தாள். தான் மாத்திரம் பெற்றால் போதாது என்று, இரட்சிப்பின் மகிழ்வை தன் குடும்பத்தினருக்கும் பெற்றுத்தந்தாள்.

அடுத்ததாக, அவள் கர்த்தருடைய ஊழியர்களை கருத்தாக தாங்கி, அவர்களது ஊழியத்திற்கு உதவியாக இருந்தாள். வசனத்தினை திறந்த மனதுடன் கேட்கும்போது, நாமும் இவ்வாறாகவே கீழ்ப்படிவோம். அநேகர் கீழ்ப்படிய உதவியாக இருப்போம், மற்றும் சத்தியத்தினை சொன்னவர்களின் ஊழியங்களுக்கு ஆதரவாக மாறுவோம். நாம் வசனங்களை எப்படி கேட்கின்றோம் என்பதைக் குறித்து இன்றைய நாளில் நம்மை நாமே நிதானிப்போம். மேலும், லீதியாளைப் போல கற்க தீர்மானிப்போம், மற்றும் செயல்படுவோம்!

# தேவனால் முடியாத காரியங்கள்...

## Things That God Cannot Do...

பிரியமானவர்களே, தலைப்பை வாசிக்கும் போதே நம்முள் சிலருக்கு மனதில் குழப்பம் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் உண்மையாகவே நம் தேவனால் முடியாது (செய்ய மாட்டார்) என்று ஒரு சில காரியங்கள் உண்டு. அது என்னவென்று காண்போம்.

1. தேவ பிள்ளையாகிய நம்மை அவரால் நேசிக்காமல் இருக்க முடியாது.
2. நம்மை விட்டு விலகி இருக்க முடியாது.
3. நாம் பாவ மன்னிப்பு கேட்கும்பபோது, மன்னிக்காமல் இருக்க முடியாது.
4. நம்மை வெறுக்க முடியாது.
5. நம் ஜெபங்களுக்க பதில் தராமல் இருக்க முடியாது.

இப்படி இன்னும் சில பிரத்தியட்சயமான காரியங்கள் உண்டு.

அவர் நம்மை மிகவும் அதிகமாக நேசிக்கிறார் (அன்பு கூறுகிறார்). அதனால் தான் தன் ஒரே மகனையே நமக்காக நம் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கக் கொடுத்தார். இதைவிட மாறாத, (யோ.3:16) மேலான அன்பை நாம் எங்கும் காண முடியாது.

அன்று யோசுவாவுக்கு சொன்னது போல, இஸ்ரவேல் மக்களுக்கு சொன்னது போலவே, இன்று வரை அவர் நம்மை விட்டு விலகாமல் பாதுகாக்கிறார், மற்றும் நம்மோடு இருக்கின்றார்.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம், பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டு என்று, வேதம் வசனம் வலியுறுத்துகிறது. இளையகுமாரன் மனந்திருந்தி தகப்பனிடம் வரும்போது சேர்த்துக் கொள்ளப்பட்டது போலவே, நாமும் பாவத்திலிருந்து மனமாற திருந்தும்போது, தேவன் நம்மை சேர்த்துக் கொள்கிறார்.

பாவிகளை ஒருபோதும் தள்ளாதவர். ஆண்டவர் இயேசு, இழந்து போனதை மீட்கவே இந்த பூமிக்கு வந்தார். குறைவானவைகளை நிறைவாக்கவே அவர் தன்னை தியாகம் செய்தார். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட எவரையும் அவர் வெறுத்து ஒதுக்குவது இல்லை. அவர் மிகுந்த கிருபையும், இரக்கமும், நீடிய சாந்தம், தயவுமுள்ளவர்.

கடைசியாக, மிகச் சிறப்பான காரியம் நம் ஜெபங்களுக்கு அவர் பதில் தந்தே தீருவார். தராமல் இருக்கமாட்டார். அவருடைய சித்தத்தினை கேட்கிற யாவருக்கும் பதில் உண்டு. நம் இருதயத்தில் வேண்டுதல்களை அருள் செய்பவர் அவர். நம் தேவன், நம் விருப்பங்களை நிறைவேற்றுகிறவர். என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் அதை செய்வோம் என்று ஆண்டவர் இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார்.

**உதாரணமாக:**

1. விபச்சார ஸ்திரியை கையும் களவுமாக பிடித்து வந்தபோது, அவளை மன்னித்து வாழ வழி செய்தார்.
2. மார்த்தாள், மரியாளின் சகோதரன் மரித்த போது அவர் வந்து அவனை உயிரோடே எழுப்பினார்.
3. இயேசுவின் பாதத்திலே பரிமள தைலத்தை ஊற்றின ஸ்தரீயை பாவி என்று அவர் அவளை விரட்ட வில்லை.
4. சமாரிய ஸ்திரிக்கு இரட்சிப்பின் வழியை அறிவித்தார்.
5. அன்னாளின் ஜெபம் கேட்கப்பட்டது.

இவைகள் தான், நம் தேவனால் முடியாத காரியங்களில் சில. அவர் எப்பொழுதும் நம் தேவனாக இருக்கின்றார். நாம் அவருடைய வார்த்தைகளின்படி அவரின் சொந்த ஜனமாக இருக்கின்றோம். அவரிடத்தில் இருந்து, அசீர்வாதங்களை பெறுகின்றோம்.

– சகோதரி
**பெவர்லி கிங்ஸ்லி**

இம்மாதம் பிறந்த நாள் மற்றும்
திருமண நாளைக் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
கிருபையுள்ள வார்த்தை
ஆசிரியர் குழுவின் சார்பாக
வாழ்த்துக்களும், ஜெபங்களும் !

பாடம் - 2

## ஆதி கிறிஸ்தவ பதிவேடுகள்

## Early Christian Documents

தொடர்ச்சி...

மக்னீபர்களுக்கு எழுதின தனது நிரூபத்தில் (கி.பி. 110-115). இக்னோஸியஸ் எழுதினதாவது "பொந்தியு பிலாத்துவின் தேசாதிபத்தியத்தின் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளான பிறப்பு, உணர்ச்சி வேகங்களுக்குட்படுதல், உயிர்த்தெழுதலைக் குறித்து முழுமையாய் ஒப்புக்கொள்ளுங்கள்; இந்தக் காரியங்களெல்லாம் உண்மையாக நிச்சயமாக இயேசுவால், நமது நம்பிக்கைக்காக நடப்பிக்கப்பட்டன."

இக்னேஸியஸ் எழுதினவைகளில் அதிகமானவைகளில், தாங்கள் மட்டுமே ஆத்ம அறிவு சார்ந்தவர்கள் என எண்ணி, இயேசுவின் "மாம்சத்தையும் - இரத்தத்தையும்" உடைய மனுஷீகத்தை ஏற்றுக்கொள்ளாத நம்பிக்கை கொண்டிருந்தவர்களைச் சாடத்தக்கதாக எழுதினார். கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மறுத்து, கிறிஸ்தவ தொழுது கொள்ளும் பழக்கம் நான்காம் நூற்றாண்டு வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தர்கித்தும் பேசின, இன்றைய தெய்வ நம்பிக்கையில்லாதவர்களுக்கும் இவை போதனைகளாக உள்ளன. இக்னேஸியஸின் நிரூபங்கள் மூலமாக, முதல் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்த கிறிஸ்தவர்கள், இயேசு முற்றிலும் மனுஷீகம் உள்ளவராகவும் முற்றிலும் தெய்வீகமுள்ளவராகவும் இருந்தார் என்று விசுவாசித்தார்கள் என்பதை இக்னேஸியஸின் நிரூபங்கள் ஆதாரமளிக்கின்றன. இயேசு முற்றிலும் தெய்வம், முற்றிலும மனுஷீகம் உள்ளவராயிருந்தார்.

### அரிஸ்டைட்ஸ் :

அரிஸ்டைட்ஸ் ஒரு தத்துவ ஞானியாகவும், பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனாகவும் இருந்தார். கி.பி. 125-ல் ஹாட்ரியன் எனும் சக்கரவர்த்தி அத்தனே (ஏதேன்ஸ்) நகரைப் பார்வையிடப் போனபோது, அரிஸ்டைட்டஸ் அவருக்கு தேவனைக் குறித்த தற்பாதுகாப்புடன் கூடிய பயபக்தியை முன்வைத்தார். அரிஸ்டைட்ஸின் பரிந்துரை பின்வரும் கருத்துக்களையும் உள்ளடக்கியது.

"கிறிஸ்தவர்கள், தங்களுடைய மார்க்கத்தின் துவக்கத்திற்கு ஆதாரமாக மேசியாவாகிய இயேசுவிடமிருந்து வந்ததாக அடையாளம் காட்டுகின்றார்; அவர் உன்னதமான தேவனுடைய குமாரன். தேவன் பரலோகத்திலிருந்து கீழே வந்ததாகவும், எபிரேய கன்னிகையினிடத்தில் பிறந்ததாகவும், அப்பொழுது மாமிச சரீரத்தைப் பெற்றுப்பிறந்ததாகவும் கூறப்படுகிறது; தேவனுடைய குமாரன் ஒரு மனுஷ குமாரத்திக்குள் வாழ்ந்தார். இவைகளெல்லாம் அவர்களுக்குள் கொஞ்ச காலம் மட்டுமே பிரசங்கிக்கப்பட்டவை. சுவிசேஷம் என்று அழைக்கப்படுகிற புத்தகங்களில் இவைகள் போதிக்கப்படுகின்றன; நீங்களும் கூட அவைகளை வாசித்துப் பார்ப்பீர்களேயானால், அதற்குள் இருக்கிற வல்லமையை கண்டுணர்வீர்கள். இந்த இயேசு, எபிரேய இனத்தில் பிறந்தவர்; தாம் மனுஷ அவதாரம் எடுத்து வந்ததன் நோக்கம் நிறைவேற்றப்படும் பொருட்டு, அவர் பன்னிரண்டு சீஷர்களைத் தமக்குக் கொண்டிருந்தார். ஆகிலும் அவர்தாமே யூதர்களாலே குத்தப்பட்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். மூன்று நாளைக்குப் பின்பு அவர் உயிர்தெழுந்து பரமேறிச் சென்றார் என்று சொல்லுகிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த பன்னிரண்டு சீஷர்களும் உலகத்தின் தெரிந்த பகுதிகளுக்கெல்லாம் சென்றனர். செல்லுமிடமெல்லாம் அவருடைய மகத்துவத்தைத் தன்னடக்கத்தோடும், நேர்மையோடும் கூறிக் கொண்டே இருந்தார்கள். அன்று துவக்கி இன்று வரை அந்தப் பிரசங்கத்தை விசுவாசிக்கிற யாவரும் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். அவர்கள் பிரசித்தமாகிறார்கள்."

### குவாட்ரேட்டஸ் :

அத்தேனே (ஏதேன்ஸ்) நகர பிஷப்பும், கிறிஸ்தவத்தின் தற்காப்பினிமித்தம், சக்கரவர்த்தி ஹாட்ரியன், அத்தேனே நகரத்தின்

'எழுசிஸ்' எனுமிடத்தில் நடைபெறும் இரகசிய மதச் சடங்காச்சாரங்கள் எனும் பண்டிகையில் கலந்து கொள்ள வந்திருந்த போது, தமது நம்பிக்கைகளை முன்வைத்தார்.

குவாட்ரேட்டஸ் ஹாட்ரியனுக்கு எழுதும்போது, "இரட்சகரின் செயல்கள் எப்போதும் உங்கள் முன்பு இருக்கிறது; அவைகள் உண்மையான அற்புதங்கள்; சுகமளிக்கப்பட்டவர்களும், மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டவர்களும், கண்ணிலே காணப்பட்டவர்களும், சுகமாக்கப்பட்ட போது மாத்திரமல்ல, உயிர்ப்பிக்கப்பட்ட போது மாத்திரமல்ல, எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், நம்முடைய ஆண்டவர் பூமியில் இருந்த காலத்தில் மட்டுமல்லாமல், பூமியை விட்டுப் போன பிறகும் கூட ஒரு நீடித்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் நமது நாட்களில் கூட வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவத்தின் இந்த பாதுகாப்பினிமித்தம், குவாட்ரெட்டஸ், இயேசு சுகப்படுத்தியவர்களும், மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களுமாகிய ஜனங்கள் தனது சந்ததி காலத்திலும் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

**ஜஸ்டின் மார்டிர் :**

ஜஸ்டின் மார்டிர் என்பவர் யூதேயாவுக்கும் கலிலேயாவுக்கும் இடையேயான பாதி வழியில், (சீகேமில் உள்ள) ஃபிளேவியா நியோபோலிஸ் எனுமிடத்தில் கி.பி. 100ம் ஆண்டு கிரேக்கப் பெற்றோருக்குப் பிறந்தவர். அவர் பேச்சுக்கலையிலும், கவிதையிலும், வரலாற்றிலும், தத்துவத்திலுமாக கல்வி கற்றவர். அவர் தனது கேள்விக்கு பதில் கண்டுபிடிக்கும் பொருட்டு ஒரு தத்துவ பள்ளியிலிருந்து மற்றொரு தத்துவப் பள்ளிக்கு மாறிமாறி போய்க் கொண்டிருந்தார்.

எபேசு பட்டணத்துக்கு அவர் போனபோது, அமைதியாக மரித்த கிறிஸ்தவ இரத்த சாட்சிகளின் (பக்தியினிமித்தம் உயிர்துறந்தோரின்) பெலத்தையும் உறுதியையும் கண்டு மனதில் ஆழமாக பதித்துக் கொண்டார். ஒரு நாள் கடற்கரையில் நடந்து கொண்டிருந்த போது வயதில் முதிர்ந்த ஒரு கிறிஸ்தவரை எதிர்பாராமல் சந்தித்தார். இந்த மனிதர் இயேசுவைக் குறித்தும் அவர் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டவைகளை நிறைவேற்றியதையும் ஜஸ்டினிடம் பேசினார்.

ஜஸ்டின், "உடனடியாக என் ஆத்துமா கொழுந்து விட்டு எரிந்து என்னில் ஒரு தூண்டுதலை உண்டாக்கியது. தீர்க்கதரிசிகளின் அன்பும், கிறிஸ்துவின் நண்பர்களின் நட்பும் என்னை ஆட் கொண்டன'', என்று எழுதினார். தான் கிறிஸ்தவனான பின்பு, ஜஸ்டின் முதலில் எபேசுவிலும், பின்பு ரோமிலும் கிறிஸ்தவ தத்துவப் பள்ளிகளைத் திறந்தார்.

ரோமில், குறை கூறும் தத்துவ ஞானியான, கிரஸன்ஸ், என்பவருடன் வழக்காடு மன்ற நிகழ்ச்சியில் பங்குபெற்றார். அதற்குப் பின்பு விரைவாக, அவர் குற்றப்படுத்தப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்படாத ஒரு மதத்தை ஊக்குவிக்கிறார்கள் என்று சொல்லி அவரை கைது பண்ணினார்கள். ரோமாபுரி அதிகாரிக்கு முன்பாக விசாரிக்கப்பட்ட போது, அவர் கிறிஸ்துவை மறுதலிக்க மறுத்தார். எனவே அவருடைய ஆறு மாணவர்களுடன் சேர்ந்து சிரச்சேதம் பண்ணப்பட்டு மரித்தார்.

- அடுத்த இதழில் தொடரும்...

**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

**வங்கிக் கணக்கில் செலுத்த,**
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# இஸ்ரவேல் மக்கள்...

கடவுளுக்கு பிரியமானவர்களே, செல்லப் பிள்ளைகளா ! எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா? தினமும் பைபிள் வாசிக்கிறீர்களா? ஜெபிக்கிறீர்களா? இயேசுவை பற்றி உங்கள் நண்பர்களிடம் சொல்கிறீர்களா?


இப்பொழுது நாம் நெகேமியா புத்தத்தில் (8ம் அதிகாரம்) நடைபெற்ற சம்பவத்திலிருந்து ஒரு முக்கியமான காரியத்தினை அறிந்து, நமக்கு தேவையான பாடங்களை கற்றுக்கொள்ளலாமா?

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பாக, இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனில் அடிமைகளாக சிறைபட்டு போனார்கள், காரணம் போரில் தோற்றுப்போனார்கள். ஏன் தெரியுமா? கர்த்தருக்கு பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்தார்கள். வேத வாசிப்பு குறைந்துபோனது, கர்த்தர் மீது உள்ள பயமும் இல்லாமல் இருந்தார்கள்.

சில ஆண்டுகள் கழித்து, இப்பொழுது மீண்டும் அவர்கள் சிறையிருப்பிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள். கர்த்தர், இஸ்ரவேல் ஜனங்களை செருபாபேல், நெகேமியா, எஸ்றா போன்ற தன்னுடைய ஊழியர்களை கொண்டு மீட்டு வந்தார்.

அவ்வாறு மீண்டும் எருசலேமிற்கு வந்த மக்கள், தங்கள் பட்டணத்தினை சரி செய்தனர். அவர்களுக்கு வேதபாராகனாகிய எஸ்றா. பிரசங்க பீடத்தின் மேல் நின்று, கர்த்தருடைய நியாயபிரமாண புத்தகத்தினை வாசித்து காண்பிக்க, புத்தகத்தினை திறந்தார். ஜனங்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.

காலை முதல் மதியம் வரைக்கும் பைபிள் வாசித்தார்கள் மற்றும் அர்த்தம் சொல்லி ஜனங்களுக்கு விளக்கி காண்பித்தனர். ஜனங்கள் அதை கவனமாக முழுமையாக முறுமுறுப்பு இல்லாமல் கவனித்தார்கள். வசனத்தை கேட்கும்போது கண்ணீர்விட்டு அழுதார்கள். பாவம் உணர்த்தப்பட்டது. பாழாய் கிடந்த தேவாலயம் சரி செய்யப்பட்டது. தங்களை கர்த்தருக்கு பிரியமாக மாற்றிக்கொண்டார்கள். ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, முதல் நாள் துவக்கி கடைசிநாள் வரைக்கும் வசனம் கேட்டார்கள். அதனால் கர்த்தரின் பாதுகாப்பு அவர்களுக்கு கிடைத்தது.



கடவுளுக்கு பிரியமான செல்லங்களா ! உங்கள் அம்மா அப்பா சபைக்கு போகலாம் வாங்க என்று அழைத்தால் கோபப்படுகிறீர்களா? அடுத்த வாரம் வரேன் என்று சொல்கிறீர்களா? அப்படி இருக்கக் கூடாது. தினமும் பைபிள் படிக்கனும், ஜெபம் செய்யனும், பைபிள் ஸ்டடிக்கு போகனும். வசனம் மனப்பாடம் செய்யனும், வசனம் உங்களை தவறு என்று உணர்த்தினால் உங்களை மாற்றிக்கொள்ளனும், செய்வீர்களா? பைபிள் படித்தால்தான் கடவுள் மீது பயம் வரும். கடவுள் மீது பயம் இருந்தால்தான் உங்களை அவர் பாதுகாப்பார். அதுமாத்திரம் அல்ல, அப்பா, அம்மாவுக்கும் கீழ்படிய வேண்டும். பள்ளி ஆசிரியர்க்கும் கீழ்ப்படியனும், சபையில் ஊழியக்காரருக்கும் கீழ்ப்படியனும் அப்பதான் கர்த்தருக்கு உங்களை ரொம்ப பிடிக்கும். செய்வீர்களா ! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : யோசுவா 1:8** "இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்."

**– அன்பு ஏசுதாஸ்**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. S. லக்ஷிதா – கரூர்
2. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
3. M. ராஜா – கரூர்
4. M. ஜோனா – கரூர்
5. S. கனிஸ்கா – கரூர்
6. A. ஹானா ஜோதி – மதுரை
7. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
8. P. அன்னாள் – மதுரை
9. P. டேனியல் – மதுரை

# அத்தேனே பட்டணத்து மக்கள்



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன் சுவிசேஷப் பிரயாணத்தில், அத்தேனே என்ற பட்டணத்திற்கு போனார். அத்தேனே பட்டண மக்கள் தினந்தோறும் ஜெபஆலயத்திலும் சந்தை அங்கே வெளிகளிலும் எதிர்ப்பட்டவர்களோடு சுவிசேஷத்தை பிரசங்கித்து வந்தார். ஒரு நாள் இதேப்போல் அவர் பேசிக்கொண்டிருந்தபோது ஜனங்கள் அவர் பேசுவது புதிதாக (நூதனமாக) இருக்கிறதே என்று சொல்லி, அவரை மார்ஸ் என்னப்பட்ட மேடைக்கு அழைத்து கொண்டு போனார்கள்.

அப்பொழுது பவுல், அவர்களை பார்த்து அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த கடவுள் பக்தியுள்ளவர்களாக இருக்கிறீர்கள். ஏனென்றால், உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்து பார்த்தபோது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்த ஒரு பலிபீடத்தைக் கண்டேன் என்றார். நீங்கள் அறியாமல் வணங்கிக்கொண்டு வருகிற அவரைப் பற்றிதான் உங்களுக்கு சொல்ல வந்திருக்கிறேன்.

அவர்தான் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன். அவர் மனுஷன் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் வாசம் பண்ணுவதில்லை. மனுஷ கைகளினால் பணிவிடை கொள்கிறதுமில்லை மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே மரித்தோரிலிருந்து எழுப்பின இயேசுவைக் கொண்டு இந்த உலகத்தை நியாயந்தீர்க்க போகிறார், ஆகையால் அனைவரும் மனந்திருந்துங்கள் என்று சொன்னார்.

பவுல் பேசினவைகளை கேட்ட அந்த பட்டணத்தாரில் சிலர், நீ சொல்லுகிறதை இன்னொரு முறை கேட்போம் என்று போய்விட்டார்கள்; சிலர் அவனைப் பற்றிக் கொண்டு விசுவாசியானார்கள்.

குட்டீஸ் ! வசனம் கேட்கும்போது நாம் எப்படி இருக்கின்றோம். கீழ்ப்படிய மனது இருக்கின்றதா? அப்படி உடனே கீழ்ப்படிந்தால், ஆசீர்வதிக்கப்படுவோம்.

**மனப்பாட வசனம் : யாக்கோபு 1:22** “அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.”

**– குயினி பிரதீப்**

# கலிலேய கடற்கரை மக்கள்



அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால், அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள்.

நமது ஆண்டவர் இயேசு, இஸ்ரவேல் தேசமெங்கும் சுற்றி திரிந்து மக்களுக்கு நற்செய்தியை சொல்லி, நோயாளிகளை சுகமாக்கி, பிசாசுகளை துரத்திக்கொண்டு வந்தார். அந்த நாட்களில் ஒரு முறை கலிலேய கடற்கரைக்குச் சென்று அங்கு இருந்த மக்களுக்கு வசனத்தினை சொல்ல ஆரம்பித்தார்.

கூட்டம் ஒரு நாள், 2 நாள் அல்ல, 3 நாட்கள் நீடித்தது. மக்களும் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிரசங்கத்தினை, தொடர்ந்து மூன்று நாட்கள் சிறிதும் சோர்ந்துபோகாமல், கேட்டுக் கொண்டிருந்தனர். நாமும் கர்த்தருடைய



வார்த்தையை கேட்க மிகவும் ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கேட்கும்பொழுது நாம் எழுந்து செல்வது வேறு ஏதாவது சிந்தனையில் இருப்பது, விளையாடுவது மற்றும் மொபைலை நோண்டுவது என நாம் செய்வது ஆண்டவரை அவமதிப்பது மட்டுமல்லாமல், நாம் மற்றவர்களின் கவனத்தையும் சிதரடிப்பதாகவும் இருக்கும்.

ஆனால், கலிலேயா கடற்கரை மக்கள், சாப்பிட சாப்பாடு இல்லாமல், போதுமான உறக்கம் இல்லாமல் தொடர்ந்து ஆண்டவருடைய வார்த்தையைக் கேட்டு ஆர்வமாக கேட்டுக்கொண்டிருந்தனர். அவர்களில் ஆண்கள் மாத்திரம் நான்காயிரத்திற்கும் அதிகமான பேர் இருந்தனர். மொத்த கூட்டம் பத்தாயிரத்திற்கும் அதிகமாக இருக்கலாம் என சொல்லப்படுகின்றது.

அவ்வளவு பேர் இருந்தும், சத்தமின்றி அமைதலாக ஆண்டவர் சொல்வதை, கவனித்துக் கேட்டனர். அவர்கள் உணவை பற்றி கவலைப்படாமல் கர்த்தருடைய வார்த்தையினை கற்றுக்கொள்வதிலே ஆர்வமாக இருந்தனர். அதனால் ஆண்டவர் அவர்களுக்கு அற்புதமாக உணவளித்துள்ளார்.

மழலைச் செல்லங்களே, நாமும் அவருடைய வார்த்தையை கேட்டு, கற்றுக்கொண்டு, அதனை கடைபிடிக்க வேண்டும். கர்த்தருடைய சத்தம் கேட்கப்படும் இடத்தில் நாம் சத்தமிட கூடாது. அமைதலாக அமர்ந்து, ஆர்வமாக கற்க வேண்டும். பள்ளியில் ஆசிரியர் அடிப்பாங்கனு பயந்து அமைதியாக இருக்கின்றாய் அல்லவா? அதேபோல தான் சபை கூட்டங்களில் வசனத்தினை கேட்காமல் தப்பு செஞ்சா, சேட்டை பண்ணா ஆண்டவரும் அடிப்பார். அதனால் பயத்துடன் நாம் அமர்ந்து கற்றுக்கொள்வோமா?

நாம் முதலில் நம்மை சரிசெய்துகொண்டு, மற்றவர்களையும் உற்சாகப்படுத்துவதின் மூலம் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். நாம் ஆண்டவருடைய வார்த்தையை கவனமாக கேட்பது மட்டுமல்லாமல் அதின் மூலம் ஆண்டவர் நம்மிடம் மாற்ற வேண்டிய விஷயங்களைக் கற்றுக்கொண்டு, அதை நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கும்போது, நம் மற்றவர்களையும் ஆண்டவரை நோக்கிப் பார்க்க வைக்க முடியும். நமக்கு என்ன தேவையோ அதை அவர் அறிவார் மற்றும் தருவார். ஆகையால் தேவையற்றதை பற்றி கவலைப்படாமல், கருத்தாக இருப்பீங்க தானே? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : ஏசாயா 66:2** "என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்.

**– பிரியா ஆண்டனி**

## பொதுவான செய்திகள்

| | | |
|---|---|---|
| Scanner | - | வருடி |
| Smart Phone | - | திறன்பேசி |
| Simcard | - | செறிவட்டை |
| Charger | - | மின்னூக்கி |
| Digital | - | எண்மின் |
| Cyber | - | மின்வெளி |
| Router | - | திசைவி |
| Selfie | - | தம்படம் |

# யாக்கோபை முன்குறித்தல்

ஹாய் செல்லக்குட்டீஸ், உங்கள் எல்லாருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாதம் வேதாகமத்திலிருந்து ஒரு புதுவிதமான பாடத்தை கற்றுக்கொள்ளப்போகிறோம். மாணவர்களாகிய நீங்கள் உங்கள் பள்ளிகளில் பலவிதமான பாடங்களை கற்றுக்கொள்ள செல்கிறீர்கள் அல்லவா? அதேபோல் இந்த வேதாகம சம்பவத்தில் ஒரு அக்காவிடமிருந்து, கற்றலின் முக்கியத்துவத்தை கற்றுக்கொள்ள போகின்றோம். அதனை பற்றி விரிவாக பார்க்கலாமா?

ஆண்டவர் இயேசு, பல ஊர்களில் சுவிசேஷ பிரயானங்களை மேற்கொண்டு வந்துகொண்டிருக்கும் பொழுது, அங்கே அக்கா ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவளுடைய பெயர் மார்த்தாள். அவளுக்கு மரியாள் என்ற ஒரு சகோதரி ஒருவர் இருந்தார். மரியாள் இயேசுவினுடைய காலடியில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டு கற்றுக் கொண்டிருந்தாள். ஆனால், மார்த்தாளோ பற்பல வேலைகளை செய்வதில் பரபரப்பாக இருந்தாள். அப்பொழுது மார்த்தாள் இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியாக விட்டு விட்டு வந்துவிட்டாள் அதைப்பற்றி உங்களுக்கு கவலையில்லையா? என்று இயேசுவிடம் கேட்டாள். எனக்கு உதவி செய்யுமாறு அவளிடம் சொல்லுங்கள் என்றாள்.



இயேசு மார்த்தாளை பார்த்து "மார்த்தாளே, நீ பலவற்றைக் குறித்து கவலைப்படுகிறாய், கலங்குகிறாய் ஆனால், தேவையானது ஒன்றே ஒன்றுதான். மரியாள் அந்த நல்ல பங்கினை தெரிந்துகொண்டாள் என்று இயேசு சொன்னார்."

இந்த சம்பவத்தில் இருந்து நாம் சபை கூடுமிடத்திலும், தனிப்பட்ட வேதவாசிப்பிலும் வேதம் சொல்லுகிறதை கவனமாக படித்துக் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றில் மட்டுமே நாம் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கவனச் சிதறல்களோ, விளையாட்டுத்தனமாகவோ, அசட்டையாகவோ ஈடுபடுதல் கூடாது. இவ்வாறாக நாமும் செய்தால் மரியாளைப் போல நல்ல பங்கினைப் பெற்றுக்கொள்வோம்.

என்ன குட்டீஸ் நீங்களும் மரியாளை போல கற்றல் என்கிற நல்ல பங்கினைப் பெற்றுக் கொள்ளுவீர்களா!

**மனப்பாட வசனம் : மத்தேயு 11:29** "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்."

**– ஏஞ்சலின் கமலம்**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. எஸ்றா பைபிள் வாசிக்கும்போது, ஜனங்கள் எப்படி கேட்டனர்?
2. பவுல் எந்த ஊரில் எந்த மேடையில் நின்று பேசினார்?
3. கலிலேயா கடற்கரை மக்கள் வசனத்தினை எத்தனை நாட்கள் கேட்டனர்?
4. மரியாள் எங்கே அமர்ந்து என்ன செய்தாள்?
5. இந்த மாதம் சிறுவர் பகுதியிலிருந்து நீ கற்றுக்கொண்டது என்ன?

## மார்ச் மாத கேள்விகள்

1. யாரை வீட்டில் ஏற்றுக்கொள்ளவும், வாழ்த்து சொல்லவும் கூடாது?
2. சத்திய ஆவியானவர் எதை பேசாமல், எதனை அறிவிப்பார்?
3. நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப்.......... விரும்புகிறேன்.
4. சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு என்ன செய்ய வேண்டும்?
5. எதனை விட்டுவிலகச் செய்யும் போதகங்களை கேட்கக்கூடாது, என சாலமோன் ஞானி எச்சரிக்கிறார்?
6. தாவீது தான் வாயை ஆவென திறந்து ஏங்குவது ஏன்?
7. நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு எப்படி இருக்க வேண்டுமென யாக்கோபு கூறுகின்றார்?
8. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் என்ன செய்வான் என ஆண்டவர் இயேசு கூறுகின்றார்?
9. ஆண்டவர் இயேசு, எப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்குமென்று சொன்னார்?
10. கேட்கிறதற்குக் காதுள்ளவன் ............. என்றார்.

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-04-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. சங்கீதம் 19:1
2. ஆதி 1:27
3. சங்கீதம் 139:14
4. ஆதி 2:21
5. ஆதி 9:4
6. ஆதி 24,18,19
7. யாக்கோபு 4:6
8. நீதி 14:12, 16:25
9. மத் 165:28
10. சங்கீதம் 19:1

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. குளோரி திலகவதி - சென்னை
2. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
3. Mrs. மேரி ராஜ் - மதுரை
4. Mrs. ஹெலன் திலக் - மதுரை
5. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
6. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
7. R. நாகலிங்கம் சித்ரா - திருச்சி
8. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
9. Mrs. பெரில் பாஸ்கர் - பப்பை
10. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
11. Mrs. லீலா ஜோசப் - கோவை
12. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
13. Mrs. பூமணி இஸ்ரவேல் - நெல்லை
14. Mrs. சாந்தி வில்லியம்ஸ் - புதுக்கோட்டை
15. Mrs. M. ஜெனீ - கரூர்
16. G. ஏஞ்சலம்மாள் - மதுரை
17. M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
18. Mrs. D. மீனாள் - மூலனூர்
19. C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
20. R. சரோஜா - தென்கலம்
21. D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
22. Mr. சூசை மரியான் - சென்னை
23. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
24. Mrs. செல்லத்தாய் சுவாமி - மதுரை
25. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
26. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
27. S. டேவிட் சாந்தகுமார் - தென்காசி
28. A.G. சாமுவேல் - தூத்துக்குடி
29. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
30. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
31. D. அலெக்சாண்டர் சாமுவேல் - சென்னை
32. J. விஜய் - மதுரை
33. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
34. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
35. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
36. Mrs. புரோமிளா சாமுவேல் - மதுரை
37. Mrs. K. ராணி மூர்த்தி - ஏர்வாடி
38. Mr. டேவிட் விஸ்வநாதன் - பொள்ளாச்சி
39. A.G. சாமுவேல் - ஒரிசா
40. A. ஆனி விக்டோரியா - சென்னை
41. Mrs. A. ரோஸ்மேரி - சென்னை
42. A. ஆனந்த கதிரோன் - சென்னை
43. Mrs. ராணி சாந்தகுமார் - மதுரை
44. J. ஷீலா ஜெபராணி - தஞ்சை
45. Mrs. ஞானசிரோன்மணி - மதுரை
46. Mrs. பாக்கியராஜம் - மதுரை
47. S. சூசைமரியான் - சென்னை
48. T. செல்வா - நெல்லை
49. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி


Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th March 2022
Posted at Arasaradi HPO on 10th 11th March 2022

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers